**DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, KAMUTHI**
**OS No.10/2024**

**2026**ம் வருடம் பிப்ரவரி திங்கள் 03ம் நாள் வாதி தரப்பில் 1வது சாட்சியத்தின் வாக்குமூலம் 1873ம் ஆண்டு 10வது விதியின் படி திரு.M.அர்ஜுன், உதவியாளர் அவர்களால் ஆணையிட்டு பிரமாணம் செய்யப்படுகிறது.

பெயர் : திருமதி.ஆயிசா கனி (PW1) கிராமம்:
தந்தை / கணவர் பெயர் :அகமது தொழில் :
வயது :

<u>முதல் விசாரணையின் தொடர்ச்சி</u>:–

1. நான் ஏற்கனவே இந்நீதிமன்றத்தில் முன்னிலையாகி நிரூபண வாக்குமூலத்தின் மூலமாக வாய்மொழி சாட்சியம் அளித்து ஆவணங்களை குறியீடு செய்வதற்காக விசாரணை ஒத்தி வைக்கப்பட்டிருந்தது. நான் நிரூபண வாக்குமூலத்தில் ஆவண பட்டியலில் குறிப்பிட்டுள்ள ஆவணங்களை என் தரப்பு ஆவணங்களாக எடுத்துக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறேன்.

2. 12.01.1914 தேதியிட்ட முகைதீன்பாத்திமா பீவி என்பவர் நாகூர்மீரான் ராவுத்தர் மகன் அப்துல் ரகுமானுக்கு எழுதிக் கொடுத்த தானசெட்டில்மெண்ட் பத்திரத்தின் அசல் வா.சா.ஆ.8 ஆக குறியீடு செய்யப்படுகிறது.

3. 21.01.1950 தேதியிட்ட நாகூர்மீரான் ராவுத்தர் மகன் அப்துல் ரகுமான் சரிபு அம்பலத்திற்கு எழுதிக்கொடுத்த கிரைய பத்திரத்தின் அசல் வா.சா.ஆ.9 ஆக குறியீடு செய்யப்படுகிறது.

4. 07.07.1950 தேதியிட்ட முகமது சரிபு அம்பலம் என்பவர் இப்ராஹிம் மகன் முகமது காசிம்மிற்கு ஏற்படுத்திக் கொடுத்த கிரைய பத்திரத்தின் அசல் வா.சா.ஆ.10 ஆக குறியீடு செய்யப்படுகிறது.

5. 19.02.2024ம் தேதியில் தாவா சொத்திற்கு தமிழ்நாடு அரசு இணையதளத்திலிருந்து எடுக்கப்பட்ட அரசு வழிகாட்டி மதிப்பின் கணினி நகல் 2 பக்கங்கள் கொண்டது வா.சா.ஆ.11 ஆக குறியீடு செய்யப்படுகிறது.

6. 25.09.1991 தேதியிட்ட முகமது காசிம் ராவுத்தர் மனைவியான

முகைதீன் பாத்திமா பீவி என்பவர் வாதிக்கு தாவா சொத்தை பொறுத்து ஏற்படுத்திக் கொடுத்த கிரைய பத்திரத்தின் அசல் வா.சா.ஆ.12 ஆக குறியீடு செய்யப்படுகிறது.

7. 13.03.2012 தேதியிட்ட தாவா சொத்து சம்மந்தமாக நூர்ஜகானின் தாயார் ஆயிசாபீவி மற்றும் நூர்ஜகானின் சகோதரர் காஜா மைதீன் ஆகியோர் இந்நீதிமன்றத்தில் OS.No.30/2011 வழக்கில் தாக்கல் செய்த எதிர் வழக்குரையின் சான்றிட்ட நகல் வா.சா.ஆ.13 ஆக குறியீடு செய்யப்படுகிறது.

8. 27.04.2012 தேதியிட்ட தாவா சொத்து சம்மந்தமாக இந்நீதிமன்றத்தில் IA.No.135/2011 ல் தாக்கல் செய்யப்பட்ட ஆணையர் அறிக்கையின் சான்றிட்ட நகல் வா.சா.ஆ.14 ஆக குறியீடு செய்யப்படுகிறது.

9. இந்நீதிமன்றத்தில் தாவா சொத்து சம்மந்தமாக IA.No.135/2011 ல் தாக்கல் செய்யப்பட்ட ஆணையர் அளித்த வரைபடம் சான்றிட்ட நகல் வா.சா.ஆ.15 ஆக குறியீடு செய்யப்படுகிறது.

10. 13.04.2017 தேதியிட்ட இந்நீதிமன்றத்தில் OS.No.33/2015 ல் IA.No.73/2017 ல் வாதி பிரதிவாதியின் தாயார் நூர்ஜகான், அப்துல்ரகுமான் ஆகியோரை சேர்ப்பதற்கு தாக்கல் செய்த சீர்திருத்த மனு மற்றும் நிரூபண வாக்குமூலத்தின் சான்றிட்ட நகல் வா.சா.ஆ.16 ஆக குறியீடு செய்யப்படுகிறது.

11. 04.04.2017 தேதியிட்ட இந்நீதிமன்றத்தில் OS.No.33/2015 மற்றும் IA.No.73/2017 ல் பிரதிவாதியின் தாயார் நூர்ஜகான், அப்துல்ரகுமான் ஆகியோர் தாக்கல் செய்த வக்காலத்தின் சான்றிட்ட நகல் வா.சா.ஆ.17 ஆக குறியீடு செய்யப்படுகிறது.

12. 20.11.2015 தேதியிட்ட பிரதிவாதியின் தாயார் நூர்ஜகானின் தாயார் ஆயிசாபிவீயும் மற்றும் அவரது மகன் காஜா முகைதீன் இந்நீதிமன்றத்தில் OS.No.33/2015 வழக்கில் தாக்கல் செய்த எதிர் வழக்குரையின் சான்றிட்ட நகல் வா.சா.ஆ.18 ஆக குறியீடு செய்யப்படுகிறது.

13. 24.01.2017 தேதியிட்ட இந்நீதிமன்றத்தில் OS.No.33/2015 ல் தாக்கல் செய்த சீர்திருத்த பிராதின் சான்றிட்ட நகல் வா.சா.ஆ.19 ஆக குறியீடு

செய்யப்படுகிறது.

14. 25.08.2015 தேதியிட்ட இந்நீதிமன்றத்தில் OS.No.33/2015 வழக்கில் பிரதிவாதியின் தாயாரின் தாயார் ஆயிசாபீவி மற்றும் காஜா மைதீன் ஆகியோர் தாக்கல் செய்த வக்கலாத்தின் சான்றிட்ட நகல் வா.சா.ஆ.20 ஆக குறியீடு செய்யப்படுகிறது.

15. 27.02.2017 தேதியிட்ட இந்நீதிமன்றத்தில் OS.No.33/2015 வழக்கில் பிரதிவாதியின் தாயாரின் தாயார் ஆயிசாபீவி இறந்துவிட்டதை தெரிவித்து வழக்கறிஞர் தாக்கல் செய்த குறிப்பாணையின் சான்றிட்ட நகல் வா.சா.ஆ.21 ஆக குறியீடு செய்யப்படுகிறது.

16. 20.09.2013 தேதியிட்ட இந்நீதிமன்றத்தில் OS.No.30/2011 ல் IA.No. 239/2013 ல் வாதி தரப்பில் செலுத்திய Cost Memo–ன் சான்றிட்ட நகல் வா.சா.ஆ.22 ஆக குறியீடு செய்யப்படுகிறது.

THANGA KARTHIKA

Digitally signed by THANGA KARTHIKA
Date: 2026.02.03 17:05:03 +0530